முருகப்பெருமான் துணை

**மகான் சிறப்புலி நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.03.2023**, புதன்கிழமை

1. பிரம்ம சூட்சுமம் கண்ட குருவே
   பிரணவ சக்தி கொண்டுமே
   வரம்பல பெற்ற ஞான குருவே
   வள்ளலே வாழுகின்ற ஞானியே
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் அனுகூல ஆசியை
   இனிமைபட சுபகிருது சால் திங்கள்
   இயம்புவேன் மூவைபீர் திகதிபுந்திவாரம்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 17 ம் நாள் 01.03.2023, புதன்கிழமை)
3. வாரமதில் சிறப்புலி நாயனார் யானும்
   வழங்குவேன் உலகநலம் பெற
   பாரதம் தரும பலம் கொண்டு
   பசிபிணி மக்களிடை விரட்ட
4. விரட்ட அன்னதான சேவையை
   விழாவாக நடத்தும் அரங்கனே
   சுருட்டும் பதுக்கும் கலியிலும்
   சுத்தமான தொண்டர்படைகளை
5. படைகளை படைத்து உலகினில்
   பரோபகாரம் அருளும் ஞானியே
   தடையற உன் தருமம் வளரவே
   தரணியில் வறுமை ஒழிந்து
6. ஒழிந்துமே மக்களிடை வளம்
   ஓங்கார வரமாக பலமாக
   அழியாமை தரும் வண்ணம்
   அரங்கன் வழி தீட்சையாக வந்து
7. வந்துமே உலக மக்களுக்கு
   வந்தடையும் ஞானசித்தி
   சிந்தை தெளிவுபட மாற்றங்கள்
   செகத்தில் அரங்கனால் கிட்டி
8. கிட்டியே உலகம் எங்கிலும்
   குறைவிலா இந்தவித சக்தி பரவி
   வாட்டமிலா ஞான பூமி ஆகும்
   வளமும் இயற்கைபலமும் கூடி
9. கூடியே உலகம் ஞானவான்கள்
   குறைவின்றி நிரம்பிய வண்ணம்
   நாடெங்கிலும் ஞானத் தலைமை
   நம்பகமுற படைத்து இனிதே

10. இனிதே ஞானிகள் ஆட்சி
இணையிலா ஞான ஆட்சியாகவே
கனிவேலவன் ஆசி தயவுகிட்ட
கருணை நிறைந்த ஆட்சி மலரும்

11. மலரும் அரங்கன் வந்தநல்
மாதவ அவதார நோக்கமாக
வளரும் மலரும் ஞான பலமுமாக
வழங்கிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–